*ச. வ. பி. 15/ 2014*

## *2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்*

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2020, யூன் 08.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (தகைமைபெற்ற ஆட்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைமுறை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், ஏதேனும் உயர் தொழிற்சார் குழுவின் உறுப்பினரொருவராகவிராதவரும் அல்லது ஒரு பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு நிர்மாணத் தொழில் தொடர்பான ஏதேனும் பதிவுச்சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகவிராதவரும் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டவரும் (இதனகத்துப் பின்னர் "தகைமைபெற்ற ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவருமான) தகைமைபெற்ற ஆளொருவருக்கெதிரான ஏதேனும் முறைப்பாட்டுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக 2 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தகைமைபெற்ற ஆளொருவருக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில், ஐயாயிரம் ரூபாப் பணத்தொகையினதான கட்டணத்துடனும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளை ஆதாரப்படுத்தும் சத்தியக் கடதாசியுடனும் இயைபான ஆவணங்களுடனும் சேர்த்து அத்தகைய முறைப்பாட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. முறைப்பாட்டைப் பெற்றதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, ஏழு வேலை நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் அதிகார சபையின் புலனாய்வுக் குழுவொன்றுக்கு அதன் அந்தரங்கமான அறிக்கைக்காக அத்தகைய முறைப்பாட்டை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

5. (1) அதிகார சபையானது, 4 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட புலனாய்வுக் குழுவினை நியமித்தல் வேண்டும். அது அதிகார சபையின் உயர் தொழில்சார் குழாமிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கு குறிப்பீடு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் மேல் புலனாய்வுக் குழுவானது புலனாய்வு நோக்கத்துக்காக–

(அ) அதிகார சபை ஊடாக இரு திறத்தவர்களிடமிருந்து அவசியமாயின் மேலாதிகச் சான்றை அல்லது தகவலைக் கோருதல் வேண்டும் அல்லது மேலதிகச் சான்று அல்லது தகவல் இல்லாதபோது முறைப்பாட்டை மேற்கொண்டு நடாத்துதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எவரேனும் தகைமை வாய்ந்த ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறையீடுகள் மற்றும் சான்று உட்பட அதற்கு வழங்கப்பட்ட சான்றைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

6. புலனாய்வுக் குழுவானது, அதற்கு முறைப்பாடு ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஐம்பத்தாறு வேலை நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அந்தரங்கமான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. அந்தரங்கமான அறிக்கையானது, கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கை முறை பற்றிய தகவல்களையும் புலனாய்வின் முடிவெடுப்புகள் மற்றும் இயைபான தகவல்கள் என்பவற்றையும் புலனாய்வுக் குழுவின் விதப்புரைகளுடன் சேர்த்து கொண்டிருத்தல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதி அந்தரங்கமான அறிக்கையையும் இயைபான எல்லா ஆவணங்களையும் தீர்மானத்துக்காக ஒழுக்காற்றுக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

9. (1) அதிகார சபையானது 8 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவை நியமித்தல் வேண்டும். இது அதிகார சபையின் உயர் தொழில்சார் குழாமிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களாக கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒழுக்காற்றுக் குழுவானது, அந்தரங்கமான அறிக்கை பெறப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு வேலை நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் கூடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அந்தரங்கமான அறிக்கையைப் பரிசோதனை செய்தலும் வேண்டும்.

10. (1) ஒழுக்காற்றுக் குழுவானது, இடாப்பில் பதியப்பட்டவாறான முகவரிக்கு விசாரணை பற்றிய அறிவித்தலொன்றை அதிகார சபையினூடாகப் பதிவுசெய்யப்பட்ட தகைமைபெற்ற ஆளுக்கு இடாப்பில் பதியப்பட்டவாறான முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) விசாரணை பற்றிய அறிவித்தல்-

(அ) பதிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற ஆள் பற்றி பெறப்பட்ட தகவல்களின் பிரதியொன்றை உள்ளடக்கி, புலனாய்வுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சார்த்துதல்களை எடுத்துக்கூறுதல் வேண்டும் ;

(ஆ) புலனாய்வுக் குழு ஆற்றுப்படுத்துகையை எத்திகதியன்று கவனத்திற்கொள்ளுவதற்குள்ளதோ அத்திகதி பற்றி தகைமை பெற்ற ஆளுக்கு அறிவித்தல் வேண்டும் ;

(இ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பாக எழுத்திலான முறையீடுகளைச் செய்யும்படி பதிவுசெய்யப்பட்ட தகைமை பெற்ற ஆளைக் கோருதல் வேண்டும்.

(3) ஒழுக்காற்றுக் குழுவானது, முறைப்பாட்டாளரையும் எந்த தகைமைபெற்ற ஆளுக்கெதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த தகைமை பெற்ற ஆளையும், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று ஒழுக்காற்றுக் குழுவின் முன்னர் தோன்றும்படி அதிகார சபையினூடாக அறிவித்தல் வேண்டும்.

11. தகைமைபெற்ற ஆளொருவர்-

(அ) நேரடியாகத் தோன்றலாம் ; அல்லது

(ஆ) நேரடியாகத் தோன்றியிருக்கையில் ஓர் இணைந்த உயர் தொழிலரினால் பிரதிநிதித்துவம் வகிக்கப்படலாம்.

12. முறைப்பாட்டாளரும் தகைமை பெற்ற ஆளும், ஒன்றில் வாய்மொழி மூலம் அல்லது எழுத்திலான வடிவத்தில் சான்றளிக்கலாமென்பதுடன் மூலச் சமர்ப்பணத்தில் வெளிப்படுத்தப்பட்டவாறாக எவரேனும் சாட்சியை முன்னிறுத்துவதற்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

13. தகைமை பெற்ற ஆள் அல்லது அவரது பிரதிநிதி முறைப்பாட்டாளரை அல்லது வேறெவரேனும் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய குறுக்கு விசாரணை, புலனாய்வின் கீழுள்ள விடயத்துக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

14. ஒழுக்காற்றுக் குழுவானது, விசாரணையின் விடயப்பொருளுக்கு இயைபற்றனவான, அல்லது அவமதிப்பான, அற்பத்தன்மையினவான அல்லது வடிவத்தில் தேவையற்ற முறையில் தீங்கு விளைவிப்பனவான கேள்விகளுக்கு அனுமதி மறுப்பதன் மூலம், சாட்சிகளின் விசாரணையையும் குறுக்கு விசாரணையையும் மட்டுப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*15.* கேட்பு நிறைவு செய்யப்பட்டதன் மேல், ஒழுக்காற்றுக் குழுவானது, புலனாய்வுக் குழுவின் அந்தரங்கமான அறிக்கையையும் இரு திறத்தவர்களினதும் சான்றையும் கவனத்திற் கொண்ட பின்னர் பெரும்பான்மை உறுப்பினர்களின் மூலம் அத்தகைய தகைமை பெற்ற ஆளின் மீது விதிக்கப்பட வேண்டிய தடை விதிப்புகள் பற்றிய விதப்புரைகளுட்பட அதன் முடிபைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அதனைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

*16.* ஒழுக்காற்றுக் குழுவின் முடிபு பெறப்பட்டதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய தடை விதிப்புகளை விதிக்கலாமென்பதுடன், இரு திறத்தவர்களுக்கும் பதிவஞ்சல் மூலமான அறிவித்தலொன்றின் மூலம் அறிவித்தலும் வேண்டும்.

*17.* பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபை அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

*18.* இவ்வொழுங்குவிதியில்-

"உயர் தொழில்சார் குழாம்" என்பது, தகைமை வாய்ந்த ஆட்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் கணிய அளவையாளர்களைக் கொண்ட முறையே உயர் தொழில்சார் குழுக்களிலிருந்து ஒவ்வொருவரும் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆறு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட உயர் தொழில்சார் குழாம் ஒன்று எனப் பொருள்படும்.

*07-253*